**8.56 பொதுப்பணிகள் – பணியில் இருக்கும் போது இயற்கை எய்திடும் அரசு பணியாளர்களின் மகன் / திருமணமாகாத மகள் – கருணை அடிப்படை திட்டத்தில் பணி வழங்க 30லிருந்து 35 ஆக வயது வரம்பினை உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டது – திருத்தங்கள் வெளியிடப்படுகின்றன.**

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
அரசு கடிதம் (நிலை) எண். 125 நாள் : 12.10.98

அனுப்புநர்
திருமதி. இக்பால் உன்னிசா, பி.ஏ.,
அரசு துணைச் செயலாளர்

பெறுநர்
தலைமைச் செயலக அனைத்து துறைகள்,
ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை,
சென்னை – 5

ஐயா,

பொருள் : பொதுப்பணிகள் – பணியில் இருக்கும் போது இயற்கை எய்திடும் அரசு பணியாளர்களின் மகன் / திருமணமாகாத மகள் – கருணை அடிப்படை திட்டத்தில் பணி வழங்க 30லிருந்து 35 ஆக வயது வரம்பினை உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டது – திருத்தங்கள் வெளியிடப்படுகின்றன.

பார்வை : அரசு (நிலை) எண். 9 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நாள் : 19.1.98.

பார்வையில் காணும் அரசாணை எண். 9, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள் 19.1.98ல் பத்தி 3ல் காணும் ‘‘கணவரால் கைவிடப்பட்ட மகள்’’ என்ற சொற்களுக்குப் பின்னர், கீழ்க்கண்ட சொற்றொடர்களை சேர்க்க ஆணையிடப்படுகின்றது.

‘‘மருத்துவ ரீதியில் இயலாமை காரணமாக அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெறும் அரசு ஊழியர்களின் மகன் / மணமாகாத மகள், தத்து எடுத்த மகன் / தத்து எடுத்த மணமாகாத மகள் / ஆதரவற்ற விதவை மகள் / கணவரால் கைவிடப்பட்ட மகள்’’.

தங்கள் உண்மையுள்ள,
அரசு செயலாளருக்காக.